# தமிழ்நாடு அரசு
# வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

**பிரிவு** : TNPSC Group VIIB & VIII **தேர்வு**

**பாடம்** : **இந்து மதம்**

**பகுதி** : **<u>உபநிடதங்கள்</u>**

**காப்புரிமை**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி VIIB & VIII தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள்,ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.

எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

ஆணையர்
வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

# உபநிடதங்கள்

## வரலாறு:

- உபநிடதங்கள் அல்லது உபநிஷத்துக்கள் பண்டைய இந்திய தத்துவ இலக்கியமாகும்.
- வேதங்களில் இவை இறுதியாக வந்தவையாகும் . எனவே இவை "வேதாந்தம்" எனவும் கூறப்படுகின்றன.
- உபநிஷதம் நான்கு வேதப் பிரிவுகளிலிருக்கும் சம்ஹிதை பிராம்மணம்,ஆரணியகம் என்ற பாகங்களைச் சார்ந்தவை.
- சமஸ்கிருதத்தில் எழுதப்பட்ட இவ்விலக்கியத்தில் பெரும்பாலும் யோகம், தத்துவம் போன்றவற்றைப் பற்றியே விவாதிக்கப் படுகிறது.
- பெரும்பாலும் குரு - சீடன் இடையே நடைபெறும் உரையாடலாக இவை அமைந்துள்ளன.
- நான்கு வேதங்களுக்கும் "சாகைகள்" என்று பெயருள்ள பல கிளைகள் உள்ளன. எல்லா சாகைகளும் தற்காலத்தில் காணப்படவில்லை. ஒவ்வொரு வேதசாகை முடிவிலும் ஒரு உபநிஷத்து இருந்திருக்கவேண்டும் என்று நம்பப்படுகிறது.

## உபநிடதம் பொருள்:

- இதில் மூன்று வேர்ச்சொற்கள் உள்ளன . 'உப', 'நி' மற்றும் 'ஸத்'. என்ற சொற்கள் புணரும்போது ஸத் என்பது ஷத் என ஆகிறது.
- 'உப' --- குருவை பயபக்தியுடன் அண்டி அவர் சொல்லும் உபதேசத்தைக் கேட்பதைக் குறிக்கிறது.
- 'நி' -- புத்தியின் மூலம் ஏற்படும் ஐயங்கள் அகலும்படியும், மனதில் காலம் காலமாக ஊறியிருக்கும் பற்பல எண்ண ஓட்டங்களின் பாதிப்பு இல்லாமலும், அவ்வுபதேசத்தை வாங்கிக் கொள்வதைக் குறிக்கிறது.
- 'ஸத்' -- அவ்வுபதேசத்தின் பயனான அஞ்ஞான -அழிவும், பிரம்மத்தின் ஞானம் ஏற்படுவதைக் குறிக்கிறது.

## உபநிடதம் பிரிவுகள் :

- வேதப்பொருள் மூன்று வகைப்படும் அவை கர்ம காண்டம்,உபாசன காண்டம்,மற்றும் ஞான காண்டம். இவற்றுள் ஞான காண்டம் தான் 'உபநிஷத்' எனப்படுவது.
- 108 உபநிஷத்துக்கள் இருப்பதாக முக்திகோபநிஷத்தில் ராமபிரான் ஆஞ்சனேயருக்குச் சொல்கிறார்.
- அவற்றில் பத்து மிக முக்கியமானவை. கீழ்காணுமாறு,

1. ஈசா வாஸ்ய உபநிடதம் (சுக்ல யசூர்வேதம் - வாஜஸனேய சாகை)

   - இது இரண்டு வழிகளைக் கற்பிக்கின்றது.
   - ஒன்று ஞானத்தின் வழி.
   - மற்றது ஞானத்தின் வழிநின்று பற்றுகளை விட்டொழிக்க வேண்டிய உளத்தூய்மையைக் கைக்கொள்ளும் வழி.

2. கேன உபநிடதம் (சாம வேதம் - தலவகார சாகை):

   - இது உளநூற் பாகுபாடுகளைத் தெளிவாக விளக்கி அனைவருக்கும் பரம்பொருளின் நிலைமையை அறிய வாய்ப்பளிக்கிறது.
   - “கேன” என்றால் சமஸ்கிருதத்தில் “கேள்வி” என்பது பொருளாகும்.
   - மந்திரங்கள் உடையது.

3. கடோபநிடதம் (கிருஷ்ணயஜுர் வேதம் - தைத்திரீய சாகை):

   - வேதாந்தத்தின் மிக உயர்ந்த கோட்பாடுகளை எடுத்துரைக்கின்றது. மறைத்தத்துவத்தை விளக்கும் பூரணமான நூல்.
   - வாழ்க்கையின் இன்ப துன்பங்களையும் வேதத்தின் விழுமிய கருத்துக்களையும் நன்குணர்ந்த ஆத்மஞானியனை ஆசிரியனாகவும் போகப் பொருள்களால் போக்கறாத பிரம்மச்சாரியாம் நகிசேதனை மாணவனாகவும் கொண்டு வேதாந்தத்தின் அதீத பயனை உலகுக்கு எடுத்து ஓதுகிறது.

4. <u>பிரசின உபநிடதம் (அதர்வண வேதம்):</u>

- ❖ ஆறு இளைஞர்கள் "திருப்பிப்பிலாதன்" என்னும் நல்லாசிரியனை நாடித் தங்களுக்கு ஏற்பட்ட வினாக்களுக்கு பதில் கோரி அவைகளைக் கேட்டுத் தங்கள் சந்தேகங்களைத் தீர்த்துக் கொண்டனர். அதுவே பிரசின உபநிடதம்.

5. <u>முண்டக உபநிடதம் (அதர்வண வேதம்):</u>

- ❖ மொட்டைத் தலையுடைய ஞானிகளுக்குரிய ஞான வாழ்க்கை பற்றிய கருத்தினைக் கொண்டது முண்டக உபநிடதம்.

6. <u>மாண்டூக்ய உபநிடதம் (அதர்வண வேதம்)</u>

- ❖ உருவில் மிகச் சிறியது . பன்னிரண்டு மந்திரங்கள் மட்டுமே உள்ளது.

7. <u>ஐத்ரேய உபநிடதம் (ரிக் வேதம் - ஐதரேய சாகை):</u>

- ❖ வருண பகவான் தனது மகன் பிருகுவுக்கு உபதேசமாகச் சொன்னது. நாம் உண்ணும் உணவே பிரம்மம் என்பதையும் உயிரைக் காப்பாற்றக்கூடிய உணவுப் பொருள் பிரத்தியஷமான தெய்வம் என்பதை சொல்வது.

8. <u>தைத்திரீய உபநிடதம் (கிருஷ்ணயஜுர் வேதம் - தைத்திரீய சாகை):</u>

- ❖ வாழ்க்கையைத் தொடங்குவதற்கு வழிகாட்டுமுகமாக ஆசிரியர் சீடனுக்குச் சொல்லும் அறிவுரைகள் கொண்டது.

9. <u>பிரகதாரண்யக உபநிடதம் (சுக்லயஜுர் வேதம் - கண்வ சாகை, மாத்யந்தின சாகை)</u>

- ❖ ஆறு அத்தியாயங்களைக் கொண்டது . உபதேசம், விளக்கம், உபாசனை இம்மூன்றும் இடம் பெற்றுள்ளன.

10. <u>சாந்தோக்யம் (சாம வேதம் - கௌதம சாகை):</u>

- ❖ பிராண வித்தையை "ஜாபாலசத்தியசாமர்" வியாக்கிரத பரதருடைய குமாரன் கோசுருத்திற்கு உபதேசித்தது.

## 108 உபநிடதங்களின் வகைப்பாடு அட்டவணை:

| வ.எண் | வேதகால உபநிடதங்கள் | வகைப்பாடுகள் |
|---|---|---|
| 01. | ரிக் வேதத்தைச் சார்ந்தது | 10 |
| 02. | கிருஷ்ணயஜுர் வேதத்தைச் சார்ந்தது | 32 |
| 03. | சுக்லயஜுர் வேதத்தைச் சார்ந்தது | 19 |
| 04. | சாம வேதத்தைச் சார்ந்தது | 16 |
| 05. | அதர்வண வேதத்தைச் சார்ந்தது | 31 |
| | மொத்தம் | 108 |

## 108 உபநிடதங்களின் வகைப்பாடுகள்:

| வ.எண். | உபநிடதங்கள் | வகைப்பாடுகள் |
|---|---|---|
| 01. | சாமானிய வேதாந்த உபநிடதங்கள் | 24 |
| 02. | யோக உபநிடதங்கள் | 20 |
| 03. | சந்நியாச உபநிடதங்கள் | 17 |
| 04. | வைணவ உபநிடதங்கள் | 14 |
| 05. | சைவ உபநிடதங்கள் | 14 |
| 06. | சாக்த உபநிடதங்கள் | 09 |
| | மொத்தம் | 108 |

**பழங்கால உபநிடதங்கள் - மூன்று வகைப்படும்:**

- கி.மு. 700 ஆம் ஆண்டிற்கு முற்பட்ட காலத்தில் இருந்த மூன்று உபநிடதங்கள் பழங்கால உபநிடதங்கள் என்று அழைக்கப்படுகின்றன.
- அவை -
    1. ஈசா
    2. சாந்தோக்யம்
    3. பிரகதாரண்யகம்

**இரண்டாம் காலகட்ட உபநிடதங்கள் இரண்டு வகை:**

- கி.மு. 600 -500 ஆம் ஆண்டிற்கு இடைப்பட்ட காலத்தில் இருந்த இரண்டு உபநிடதங்கள் இரண்டாம் காலகட்ட உபநிடதங்கள் என்று சொல்லப்படுகின்றன.
- அவை
    1. ஐத்ரேயம்
    2. தைத்திரீயம்

**மூன்றாம் காலகட்ட உபநிடதங்கள் ஐந்து வகை:**

- கி.மு. 500 -400 ஆம் ஆண்டிற்கு இடைப்பட்ட காலத்தில் இருந்த ஐந்து உபநிடதங்கள் மூன்றாம் காலகட்ட உபநிடதங்கள் என்று சொல்லப்படுகின்றன.
- அவை
    1. பிரச்னம்
    2. கேனம்
    3. கடம்
    4. முண்டகம்
    5. மாண்டூக்யம்

<u>நான்காம் காலகட்ட உபநிடதங்கள் மூன்று வகை:</u>

- கி.மு. 200 -100 ஆம் ஆண்டிற்கு இடைப்பட்ட காலத்தில் இருந்த மூன்று உபநிடதங்கள் நான்காம் காலகட்ட உபநிடதங்கள் என்று சொல்லப்படுகின்றன.
- அவை
  1. கவுஷீதகி
  2. மைத்ரீ
  3. சுவேதாசுவதரம்

[

<u>இதர முக்கிய உபநிடதங்கள்:</u>

- முக்கிய பத்து உபநிடதங்களை தவிர , இதர 98-ல் முன்னிடத்தில் வைக்கப்பட்டுள்ளவை.
  1. சுவேதாச்சவதரம்
  2. கௌஷீதகியம்
  3. நரசிம்ம பூர்வதாபனீயம்
  4. மகோபநிஷத்
  5. கலிஸ்ந்தரணம்
  6. கைவல்யம்
  7. மைத்ராயணீயம்

<u>உபநிடதங்களுக்கு உரைகள் எழுதியவர்கள்:</u>

- ஆதிசங்கரர், இராமானுஜர், மத்துவர், நீலகண்ட சிவாச்சாரியார் ஆகிய நால்வரும் முறையே அத்வைதம், விசிஷ்டாத்வைதம், துவைதம், சித்தாந்தம் என்னும் கொள்கைகளையொட்டி, முக்கியப் பத்து உபநிடதங்களுக்கு உரையெழுதியுள்ளனர்.
- 18- ஆவது நூற்றாண்டைச் சேர்ந்த "உபநிஷத் பிரம்மேந்திரர்" என்ற துறவி 108 உபநிடதங்களுக்கும் உரை எழுதியுள்ளார்.

------****-----****----